**<u>IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR</u>**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | IA.No. 119/2014 in IA.NO. 483/2013 in OS.No. 281/2013 |
| நாள் | 22.10.2025 |
| வா.சா.2 | பெரியசாமி |
| வயது | 60 |
| ஊர் | மயிலாடுதுறை |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**<u>1 வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் பைனான்ஸ் தொழில் மற்றும்விவசாயம் செய்து வருகிறேன். நான் பைனான்ஸ் தொழிலை மயிலாடுதுறையில் செய்து வருகிறேன். மேற்படி பைனான்ஸ் தொழிலை கடந்த 35 ஆண்டுகளாக செய்து வருகிறேன். நான் செய்து வரும் பைனான்ஸ் தொழிலை லக்கி பைனான்ஸ் என்ற பெயரில் செய்து வருகிறேன். அது ஒரு பதிவு செய்யப்பட்ட பைனான்ஸ் நிறுவனம் ஆகும். அது பங்குதாரர் நிறுவனம் அல்ல. நான் கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தாலுக்கா, வேலாம்பாடி கிராமத்தில் விவசாயம் செய்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வரும் நிலமானது என்னுடைய பூர்வீக நிலமாகும். என்னுடைய பெயரிலும் நிலம் வாங்கியுள்ளேன். நான் என் பெயரில் கிரயம் பெற்ற நிலத்தை சுமார் 20 வருடங்களுக்கு முன்பாக வாங்கினேன். நான் மயிலாடுதுறையில் செய்து வருவதால் வீடு ஏதேனும் அங்கு வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன். அந்த வீடு என்னுடைய மனைவியின் பெயரில் உள்ளது. நான் மயிலாடுதுறையில் மனைகள் ஏதேனும் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. நான் மயிலாடுதுறையில் உள்ள எனது மனைவியின் பெயரில் உள்ள வீட்டையும், என்னுடைய பூர்வீக ஊரில் உள்ள என் பெயரில் வாங்கப்பட்ட சொத்தையும் தவிர்த்து, வேறு இடங்கள் வேறு ஏதேனும் மனை மற்றும் நிலங்கள் வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன். விற்றும் உள்ளேன். நான்

வேலாம்பாடி கிராமத்தில் மனை வாங்கியுள்ளேன். அது ஊரில் உள்ள மனையை தான் விற்றுள்ளேன். அது எப்போது விற்பனை செய்தேன் என்று தேதி நினைவில்லை. சொத்தை கிரயம் பெறுவதற்கும், கிரயம் வாங்குவதற்கும் உண்டான நடைமுறைகள் அனைத்தும் எனக்கு நன்றாக தெரியுமா என்றால் முழுவதும் தெரியாது. ஆலோசனையின் அடிப்படையில் அவற்றை செய்வேன். நான் யாருடைய ஆலோசனையின் அடிப்படையில் கிரயம் பெறுவேன் என்றால் நண்பர்களின் ஆலோசனையில் அடிப்படையில் கிரயம் பெறுவேன். நான் தாக்கல் செய்துள்ள மனுவின் விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது. மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரம் மற்றும் நான்கெல்லைகள் விவரங்கள் எனக்கு தெரியாது. காலம்கடந்துவிட்டதால் எனக்கு நியாபகமில்லை. மனு சொத்தை கிரயம் பெற்றதாக சொல்லப்படும தேதி தெரியுமா என்றால் தெரியும். கடந்த 22.05.2013 ம் தேதியன்று கிரயம் பேசி, பணம் கொடுத்துவீட்டு, கடந்த 23.08.2013 ம் தேதியன்று அந்த சொத்தை பதிவு கிரயம் பெற்றேன். கடந்த 22.05.2013 ம் தேதிக்கு முன்பாக நான் எப்போது, யாரை அணுகி சொத்தை கிரயம் பெறுவதற்கு பேசினேன் என்றால் தேதி நினைவில்லை. சேகர், பார்த்திபன், சுப்பிரமணி, ஸ்டாலின்ஆகியோரை மே மாதம் 2013 ம் வருடம் சந்தித்து, பேசி சொத்தை கிரயம் பெறுவதற்கு பேசினேன். நான் அவர்களை நேரடியாக சந்தித்து கிரயம் பேசினேன். இம்மனுவில் 1,2 மனுதாரர்களான சரவணன் மற்றும் கந்தசாமி ஆகியோர்களை கலந்து ஆலோசித்த பின்பு மனு சொத்தை கிரயம் பெற்றேன். மேற்படி 1,2 மனுதாரர்கள் இன்றுவரை என்னுடைய தொடர்பில் உள்ளார்கள் என்றால் சரிதான். மனு சொத்தை கிரயம் பெறுவதற்கு 2 வருடங்களுக்கு முன்பாக 1,2 மனுதாரர்களை எனக்கு தெரியும். மனு சொத்தை கிரயம் பெறுவதற்கு முன்பாக மனு சொத்தின் மூல ஆவணங்களை பார்த்தேன். மனு சொத்தை கிரயம் பெறுவதற்கு பேசி முடித்த பின்பு, கிரய தேதிக்கு முன்பாக மனு சொத்தின் வில்லங்க சான்றிதழ் செய்து பார்த்தேன். மனு சொத்தை கிரயம் பெறுவதற்கு முன்பாக மனு சொத்தின் மூல ஆவணங்களும், வில்லங்க சான்றிதழ் பார்த்தற்கு மேற்படி ஆவணங்கள் என்னிடத்தில் உள்ளதா என்றால்

தேடி பார்க்க வேண்டும். மூல ஆவணங்கள் என்னிடத்தில் தான் உள்ளது. வில்லங்க சான்றிதழை மட்டும் தேடி பார்க்க வேண்டும். மூல ஆவணங்களை இம்மனுவுடன் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. தேவை ஏற்பட்டால் தாக்கல் செய்கிறேன். மனு சொத்து விவசாய நிலமா அல்லது மனைநிலமா என்றால் தரிசு நிலமாகும். பட்டா,சிட்டா ஆகியவற்றின் விவரங்கள் எனக்கு நன்றாக தெரியும். நாளது தேதி வரையில் மனு சொத்தின் பட்டா என் பெயருக்கு மாற்றததற்கு காரணம் இருக்கிறதா என்றால் நான் மயிலாடுதுறையில தொழில் செய்து வந்ததால், மனு சொத்திற்கு உண்டான பட்டா, சிட்டா ஆவணங்களை உடனடியாக எனது பெயரில் மாற்றவில்லை. நான் இம்மனுவை தாக்கல் செய்துவிட்டதால், நான் வருவாய் ஆவணங்களை பெயர் மாற்றவில்லை. நான் இம்மனு நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால், வருவாய் அதிகாரியிடம் பெயர் மாற்றதற்கு மனு கொடுக்கவில்லை. நான் மனு சொத்தை பெயர் மாற்றதற்கு காரணம், மனு சொத்தை பெயரளவில் கிரயம் பெற்றதால் தான் என்றால் சரியல்ல. 2 வது எதிர்மனுதாரர் ஸ்டாலின் என்பவரை கிரயம் பேசிய பின்பு, 4,5 முறை சந்தித்து பேசினேன். அவ்வாறு பேசிய போது சொத்தின் விவரங்களை கேட்டு அறிந்தேன். ஸ்டாலின் என்பவர் வழக்கு இருப்பதாக அவர் கூறினாரா என்றால் அதை பற்றி அவர் கூறவில்லை. ம.த.சா.ஆ.2 கிரய ஆவணத்தில் தேதியானது 22.05.2013 என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், கடந்த 23.08.2013 ம் தேதியன்று கிரய ஆவணத்தை பதிவு செய்தததற்கு தனிப்பட்ட காரணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் தனிப்பட்ட காரணங்கள் எதுவும் இல்லை. கடந்த 22.05.2013 ம்தேதியன்று ம.த.சா.ஆ.2 கிரய ஆவணததில் சொத்திற்குண்டான கிரய தொகை முழுவதையும் வெள்ளியணை சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கொடுத்தேன். கடந்த 22.05.2013 ம் தேதியன்று வெள்ளியணை சார் பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கிரய தொகை முழுவதையும் கொடுத்த நான், அன்றைய தேதியிலோயே ம.த.சா.ஆ.2 கிரய ஆவணத்தை ஏன் பதிவு செய்யவில்லை என்றால் அன்றைய தேதியில் நேரம் முடிந்துவிட்டதால்

அன்றைய தேதியில் பதிவு செய்யவில்லை. கடந்த 22.05.2013 ம் தேதியன்று ம.த.சா.ஆ.2 கிரய ஆவணம் முழுவதும் தயார் செய்யப்பட்டது. நான் ம.த.சா.ஆ.2 கிரய ஆவணத்தையும், மற்ற ஆவணங்களையும் சட்ட அறிவை பயன்படுததி தயார் செய்தேன்என்றால் சரியல்ல. 1 வது எதிர்மனுதாரிடம், 2 வது எதிர்மனுதாரர் பெற்ற கடன் தொகையை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்திற்காக, நான் 2 வது எதிர்மனுதாரரிடமிருந்து மனு சொத்தை பெயரளவில் கிரயம் பெற்றேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சட்ட அறிவிப்பை 1 வது எதிர்மனுதாரர் கடந்த 05.08.2013 ம்தேதியன்று அனுப்பட்டு, 2 வது எதிர்மனுதாரர் அந்த சட்ட அறிவிப்பை கடந்த 08.08.2013 ம் தேதியன்று பெற்று கொண்டார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மனு சொத்தை தவிர்த்து, மற்ற சொத்துக்களை நான் கூட்டாகவும் வாங்கியுள்ளேன். தனியாகவும் வாங்கியுள்ளேன். மனு சொத்தில் என்னுடைய விகிதச்சார பங்கு 6 ஏக்கர் 60 செண்டாகும். நான் கடந்த 13 ஆண்டுகளாக என்னுடைய பங்கை பாகம் பிரித்து கொடுக்க வேண்டும் என்று கேட்கவில்லை. மனுச்சொத்தை நான் பெயரளவில் கிரயம் பெற்றதால் தான் அவ்வாறு கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் முற்றிலும் தவறானது என்றால் சரியல்ல. நான், 2 வது எதிர்மனுதாரருடன் கள்ளக்கூட்டு செய்து கொண்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆகவே, மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.